வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com
மலர் : 07
13.02.2026 வெள்ளிக்கிழமை
இதழ் : 44
பக்கங்கள் : 08




## சி.ஐ.டியின் 4ஆம் மாடி சித்திரவதை முகாம்!

### அநுர பிரியதர்சன யாப்பா சொல்கிறார்

கொழும்பு, பெப். 13

குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் நான்காம் மாடி சித்திரவதை முகாம். மனித குலத்துக்கு எதிரான வகையில் பயங்கரவாதத்தில் இருந்து அரசை பாது காக்கும் உத்தேச சட்டவரைவு தயாரிக்கப்பட்டுள்ளது - இவ்வாறு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

1979ஆம் ஆண்டு தற்காலிக ஏற்பாடாகவே பயங்க ரவாத தடைச்சட்டம் உருவாக்கப்பட்டது. நாட்டில் அப்போதைய சூழலுக்கு பயங்கரவாத தடைச் சட்டம் பொருத்தமானதாக அமைந்தது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான கைதுக ளில் விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்கள் பல சித்திரவதைகளுக்கு முகங்கொடுத்தார்கள். கொழும்பு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் நான்காம் மாடி சித்திரவதை முகாமாகவே காணப்படுகிறது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின்

07

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள்; விசாரணைக்கு தனி நீதிமன்றம்

கொழும்பு, பெப்ரவரி. 13

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்காக விசேட மேல் நீதிமன்றம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நீதிமன்றின் விசாரணை நடவடிக் கைகள் கொழும்பு 07, பௌத்தாலோக மாவத்தையில் அமைந்துள்ள இலக்கம் சி 76 எனும் முன்னாள் அமைச்சர் ஒருவரின் உத்தி யோகபூர்வ இல்லத்தில் நடைபெறவுள்ளன.

இதற்குத் தேவையான வசதிகளை வழங்கு வதை விரைவுபடுத்துமாறு விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் ஹர்ஷன நாண யக்கார நேற்று வியாழக்கிழமை அறிவு றுத்தல் வழங்கினார்.

அரச நிர்வாகம், மாகாண சபைகள்

07



நீதிமன்றம் அமைக்கப்படும் பணிகளை நீதி அமைச்சர் நேற்றைய தினம் பார்வையிட்டபோது...

## துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்த சிறுவனின் சடலத்துடன் உறவினர் நேற்று போராட்டம்

### பொலிஸாருடன் முரண்பட்டதால் வட்டுக்கோட்டையில் பதற்றநிலை!

யாழ்ப்பாணம், பெப். 13

அல்லைப்பிட்டியில் பொலிஸாரின் துப்பாக் கிச்சூட்டில் உயிரிழந்த் சிறுவனின் சடலத்துடன் நேற்றைய தினம் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது, அவர்கள் பொலிஸா ருடன் வாக்குவாதத்திலும் ஈடுபட்டமையால் வட்டுக்கோட்டையில் நேற்று பதற்ற நிலை ஏற்பட்டிருந்தது.



## முதல் துப்பாக்கிச்சூட்டிலேயே எனது மகன் மயக்கமடைந்தார்

### உயிரிழந்த சிறுவனின் தாயார்

யாழ்ப்பாணம், பெப். 13

"முதலாவது துப்பாக்கிச்சூட்டிலேயே எனது மகன் மயக்கமடைந்தார். வாகனத்தை நிறுத்திய பின்னரே துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது", இவ்வாறு அல்லைப் பிட்டியில் பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் உயிரி ழந்த அ.அருள்பயாஸின் தாயார் குறிப்பிட்டுள்ளார்.

உயிரிழந்த சிறுவனின் இறுதிச்சடங்கு நேற்று நடை பெற்றது. இதன்பின்னர், ஊடகங்களிடம் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "எனது மகனுக்கும் மோட்டார் சைக்கிளில் நின்ற பொலிஸாருக்குமிடையேதான் பிரச்னை ஏற்பட்டது. அவர்களுடன் பிரச்னைபட்டுவிட்டு

07

## கடவுச்சீட்டு வழங்கல் இடைநிறுத்தம்

கொழும்பு, பெப். 13

கடவுச்சீட்டு வழங் கும் சேவைகள் தற்காலி கமாக இடைநிறுத்தப் பட்டுள்ளது. மீண்டும் சேவைகள் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகும் என்று குடிவரவு

07

## விபத்துகளில் 276 பேர் பலி!

கொழும்பு, பெப். 13

நடப்பு ஆண்டில் இது வரை 263 வீதி விபத்துகள் இடம்பெற் றுள்ளன. இவற்றில் 276 பேர் உயிரிழந்தனர் என்று போக்குவரத்து மற்றும் வீதிப்பாது காப்பு தொடர் பான பிரதி பொலிஸ் மா

07

## இலங்கையின் அபிவிருத்திக்கு தொடர்ந்து ஆதரவளிப்போம்!

### ஆசிய அபிவிருத்தி வங்கி உறுதி

கொழும்பு, பெப். 13

இலங்கையின் அபிவிருத்தி செயல்முறைக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி தனது தொடர்ச்சியான ஆதரவை வழங்கும் என்று மீண்டும் உறுதியளித்துள்ளது.

பல ஆண்டுகளாக கட்டியெழுப்பப்பட்ட வலுவான பங்காளித்துவத்தின் அடிப்படையில் இலங்கையுட னான உறவுகளை மேலும் விரிவுபடுத்த எதிர்பார்ப்பதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான புதிய பணிப்பாளர் ஷானன் கவுலின்

07

## தரமான கல்வியை உறுதிப்படுத்த கல்வி சபையை நிறுவ நடவடிக்கை

### பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவிப்பு



கொழும்பு, பெப். 13

ஆசிரியர்களின் தொழில்சார் கௌரவத்தை பாதுகாப்ப தற்கும், தரமான கல்வியை உறுதிப்படுத்துவதற்கும் "கல்வி சபை" ஒன்றை நிறுவுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன - என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித் துள்ளார்.

"ஒரு நாகரிகமான சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு

07

## பாராளுமன்ற ஓய்வூதிய நீக்குதல் சட்டமூலத்துக்கு குழு அங்கீகாரம்!

கொழும்பு, பெப். 13

பாராளுமன்ற ஓய்வூதியம் (நீக்குதல்) சட்டமூலத் துக்கு ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வை குழுவில் அங்கீகாரம் வழங்கப் பட்டுள்ளது.

ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு அதன் தலைவர் பாராளு மன்ற உறுப்பினர் நஜித் இந்திக தலைமையில் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் கூடியபோதே இதற்கான அனுமதி கிடைத்தது.

பாராளுமன்ற ஓய்வூதியம் (நீக்குதல்)

07

### பாலின மாற்ற சிகிச்சை அனுமதி

## ரணில், மைத்திரிக்கு அறிவித்தல் பிறப்பிக்க உயர்நீதிமன்று கட்டளை

கொழும்பு, பெப். 13

முன்னாள் ஜனாதிபதிகள் மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க சார்பில் சட்டமா அதிபருக்கும் அறிவித்தல் பிறப்பிக்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பெண்கள், ஆண்கள் உயிரியில் அடிப்படைக்கு புறம்பாக - தமது விருப்பத்துக்கு ஏற்ப அறுவைச் சிகிச்சை மூலம் பாலின அடையாளத்தை மாற்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து

07

## "மிகமோசமான சபாநாயகர்"

### மரிக்கார் குற்றச்சாட்டு


கொழும்பு, பெப். 13

நாட்டின் வரலாற்றில் மிகவும் மோசமான சபா நாயகர் தற்போதுள்ள சபாநாயகர் ஆவார். மகிந்த யாப்பா அபேவர்த்தனவைவிட இவர் முற்றுமுழுதாக ஒரு பக்க சார்பாகவே செயல்பட்டுக்

07

**உண்மைகள் புனிதமானவை, கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சிவஞான வைரவர் ஆலய மகா கும்பாபிஷேகம் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.
(படங்கள் - யாழ். இந்துக் கல்லூரி புகைப்பட கலைக் கழகம்)

## கால்நடை திருட்டை தடுக்கக் கோரி வேலணையில் நேற்று போராட்டம்!

யாழ்ப்பாணம், பெப். 13

கால்நடைகளை திருடி இறைச்சியாக்கும் கும்பலை ஒழிக்க சட்டம் ஒழுங்கை நடைமுறைப்படுத்தும் தரப்பினர் முழுமையாக பங்களிக்க வேண்டும் என்று கோரி வேலணையில் நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தீவகம் தெற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கத்தால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வேலணை பங்களாவடி சந்தியில் கூடிய போராட்டக்காரர்கள் நடைபவனியாக வேலணை பிரதேச செயலகம் வரை சென்று அங்கு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதைத் தொடர்ந்து, பிரதேச செயலர் த. அகிலனிடம் தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவையும் வழங்கினர்.

இதன்போது, "வறிய பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்தை அழிக்காதே", "சட்டம் ஒழுங்கை நடைமுறைப்படுத்த பொலிஸாருக்கு துணை நிற்போம்", "வாழ்வாதாரத்தை பறிக்காதே", "ஊர் கூடித் திருட்டை ஒழிப்போம்" என்று கோஷங்களை எழுப்பியிருந்தனர்.

(-03-09)



## அல்லைப்பிட்டி துப்பாக்கிச்சூடு; மனித உரிமை குழு விசாரணை

யாழ்ப்பாணம், பெப். 13

அல்லைப்பிட்டியில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தவரின் மரணம் தொடர்பில் சம்பவ தினத்தில் கடமையில் இருந்த ஊர்காவற்துறை பொலிஸ் உத்தியோகத்தர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளது என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் ரி. கனகராஜ் தெரிவித்தார்.

"துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த நபர் தொடர்பான விசாரணைகளை மனித உரிமைகள் ஆணைக்குழு மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில், உயிரிழந்த நபர் பயன்படுத்திய வாகனத்தை நேரில் சென்று பார்வையிட்டதுடன், அதில் காணப்பட்ட தடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தியிருக்கிறோம்.

உயிரிழந்த நபரின் உறவினர்களிடம் ஏற்கனவே வாக்குமூலங்கள் பெறப்பட்ட நிலையில், துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸ் உத்தியோகத்தர்களிடமும், சம்பவ தினத்தன்று கடமையில் இருந்த ஏனைய பதவிநிலை உத்தியோகத்தர்களிடமும் வாக்குமூலங்கள் பெறப்படவுள்ளன - என்றார்.

## திருக்கேதீச்சரத்துக்கு விசேட பேருந்து சேவை

வடமராட்சி, பெப். 13

மகா சிவராத்திரி தினமான எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறையிலிருந்து மன்னாரின் திருக்கேதீச்சரம் ஆலயத்துக்கு விசேட பேருந்து சேவை நடத்தப்படவுள்ளது.

இலங்கை போக்குவரத்து சபையின் பருத்தித்துறை சாலையால் இந்த விசேட சேவை முன்னெடுக்கப்படவுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5 மணி, காலை 7 மணி, காலை 9 மணி, பிற்பகல் 3 மணி, பிற்பகல் 4 மணிக்கு பருத்தித்துறை பேருந்து நிலையத்திலிருந்து திருக்கேதீச்சரத்துக்கு இந்த விசேட பேருந்து சேவைகள் நடத்தப்படும் என்று பருத்தித்துறை சாலை அறிவித்துள்ளது.

(02-08)

## வவுனியா விவசாய பயிற்சி நிலையத்தில் வயல் விழா!

வவுனியா, பெப். 13

வவுனியா மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் வயல் விழா நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

"படுகையில் இருந்து அறுவடை வரை" எனும் தொனிப்பொருளில் மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் கலந்து கொண்ட அதிதிகள் அறுவடைக்கு தயாராக இருந்த நெல் கதிர்களை பாரம்பரிய முறைப்படி அறுவடை செய்தனர்.

பண்ணை முகாமையாளர் எம். அஜந்தகுமாரன் தலைமை யில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ச. சிவஸ்ரீ, பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் திருமதி மாலினி முரளீதரன், பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் ச.சர்வராஜா, கால்நடை பிரதிப் பணிப்பாளர் திருமதி வைத்தியர் கே.யோகராஜா, மற்றும் விவசாய உத்தியோகத்தர்கள் எனப் பலர் பங்கேற்றனர்.

(-10)



## வடக்கு, கிழக்கில் மழை

யாழ்ப்பாணம், பெப். 13

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நாளை மறுதினம் வரை மழை பெய்யக்கூடும். எனவே, விவசாயிகள் தங்கள் அறுவடை மற்றும் அறுவடைக்கு பின்னான செயல்பாடுகளை மழையை கருத்தில் கொண்டு திட்டமிட்டு செயல்படுவது சிறந்தது என யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் புவியியல்துறை பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள காலநிலை அவதானிப்பு குறிப்பில்,

வங்காள விரிகுடாவில் இலங்கைக்கு தென் கிழக்கு திசையில் உருவாகும் வளிமண்டல தளம்பல் நிலை காரணமாக எதிர்வரும் 14ஆம் திகதி வரை வடக்கு, கிழக்கு, மத்திய, ஊவா, மேற்கு, வட மத்திய, சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் மிதமானது முதல் சற்றுக் கனமானது வரை மழை கிடைக்கக்கூடும்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் சற்று கனமான மழை கிடைக்கும். இதேவேளை கிழக்கு, மத்திய, மேல், வட மத்திய, தென் மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் பரவலாக கனமழை கிடைக்கும்.

மீளவும் எதிர்வரும் 16ஆம் திகதியளவில் வங்காள விரிகுடாவில் மீண்டும் ஒரு காற்றுச் சுழற்சி உருவாகலாம். இதனால் மீண்டும் 16ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரை வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கக் கூடும்.

இதேவேளை இலங்கைக்கு அதிக மழை கிடைக்க காரணமாக விளங்குகின்ற மேடன் ஜூலியன் அலைவானது எதிர்வரும் நாட்களில் வங்காள விரிகுடா கடற்பகுதிக்கு வரும் என எதிர்பார்க்கப்படுவதனால் எதிர்வரும் பெப்ரவரி மாதத்தின் இறுதி நாட்களிலும் மார்ச் மாதத்தின் ஆரம்ப நாட்களிலும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளில் கனமழை கிடைக்கலாம். எனினும் இதனை அடுத்த சில நாட்களிலேயே உறுதிப்படுத்த முடியும்.

எனவே இந்த நாட்களைக் கருத்தில் கொண்டு விவசாயிகள் தங்கள் அறுவடை மற்றும் அறுவடைக்கு பின்னான செயல்பாடுகளை மேற்கொள்வது சிறந்தது - என்று குறிப்பிட்டுள்ளார்.

## கட்டைக்காடு றோ. க. த. க. பாடசாலை இல்லமெய்வன்மை போட்டி நடைபெற்றது

வடமராட்சி, பெப். 13

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு றோ. த. க. பாடசாலையின் இல்ல மெய்வன்மை போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

பாடசாலை மைதானத்தில் அதிபர் த. யோகலிங்கம் தலைமையில் நடந்த இந்த விளையாட்டு போட்டி விருந்தினர்கள் வரவேற்புடன் ஆரம்பமானது.

தொடர்ந்து, மாணவர்களுக்கான பல்வேறு விளையாட்டு நிகழ்வுகள் இடம் பெற்றதுடன் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் வெற்றிக் கேடயங்கள் வழங்கப்பட்டன.



இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் உதவி அதிபர் அருட்பணி றெனால்ட் செறில்நெஸ், சிறப்பு விருந்தினராக மருதங்கேணி கோட்டக்கல்வி பணிப்பாளர் சிறிராமச்சந்திரன், கௌரவ விருந்தினராக முள்ளியான் கிராம அலுவலர் சுபகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்துடன், இந்த விளையாட்டு போட்டியில் அந்தப் பகுதி மக்கள், மாணவர்களின் பெற்றோர், பழைய மாணவர்கள் எனப் பலர் பங்கேற்றிருந்தனர்.

(02-08)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
13.02.2026 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், மாசி 01

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## இன்னும் எத்தனை காலத்துக்கு?

ஏக்கிய ராஜ்ய என்னும் அடிப்படையில் புதிய அரசியல் யாப்பு ஒன்றைக் கொண்டுவரும் முயற்சியில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஈடுபட்டு வருகிறது - எனவே, அதனை ஆட்சேபிக்கும் நோக்கிலும் எங்களுக்கான தேச அங்கீகாரத்தை உறுதிப்படுத்தும் நோக்கிலும் நாம் செயலாற்ற வேண்டும் - அதற்கான பொது இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் என்பது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வாதமாக இருக்கிறது. இந்த அடிப்படையில் யாழ்ப்பாணத்தில் ஒரு சந்திப்பும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிவில் சமூகக் குழுக்களையும் உள்ளடக்கியதாக இந்த சந்திப்பு நடைபெறவுள்ளது. தமிழ் கட்சிகள் மற்றும் சிவில் சமூகம் என்போர் ஒரு நேர்கோட்டில் இணைவது வரவேற்கப்பட வேண்டிய விடயம்தான். ஆனால், அரசாங்கத்துக்கு புதிய அரசியல் யாப்பு தொடர்பில் எந்தவோர் அபிப்பிராயமும் இல்லாத நிலையில் - அதற்கான முயற்சிகளிலும் ஈடுபடாத போது, தமிழ்க் கட்சிகள் தங்களுக்குள் ஏக்கிய ராஜ்ய தொடர்பில் முட்டி மோதிக் கொள்வதை எவ்வாறு புரிந்து கொள்வது?

முயற்சி இடம்பெற்றால்தானா நாங்கள் பேச வேண்டும் - ஏன் எங்களுடைய அரசியல் நிலைப்பாட்டை முன்வைத்து நாங்கள் பேசலாம்தானே என்னும் கேள்வி குறுக்கிடலாம். அது சரியான வாதம்தான். ஆனால், யுத்தம் முடிவுற்று பதினாறு ஆண்டுகளாகின்றன. இத்தனை ஆண்டுகளில் அவ்வாறான ஒரு கருத்தொருமித்த நிலைப்பாட்டுக்கு வர முடியவில்லையா? எத்தனையோ சந்திப்புகள், கூட்டங்கள், சிவில் சமூகக் கலந்துரையாடல்கள் இந்தக் காலத்தில் நடைபெற்றிருக்கின்றனவே - ஏன் அவற்றின் ஊடாக ஓர் இணக்கப்பாட்டுக்கு வர முடியாமல் போனது?

சில நாட்களுக்கு முன்னர் இலங்கைத் தமிழ் அரசு கட்சியும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியும் இணைந்து பொது ஆவணம் ஒன்றைத் தயார் செய்யப் போவதாக அறிவித்திருந்தன. அது தொடர்பிலும் ஈழநாடு கேள்வி எழுப்பியிருந்தது - அவ்வாறாயின், இத்தனை ஆண்டுகளாக ஒரு பொது ஆவணம் இல்லாமலா தமிழ்த் தேசிய அரசியல் நகர்ந்திருந்தது - இனித்தானா பொது ஆவணமொன்றை தயார் செய்யப் போகிறீர்கள்? அவர்கள் பொது ஆவணம் பற்றி பேசியிருந்த பின்னணியில்தானா தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் ஆட்டத்தில் இறங்கியிருக்கிறது. அதாவது, அவர்களுக்கு முன்னதாக சிவில் சமூகத்தோடு இணைந்து ஓர் இணப்பாட்டை எட்டியிருக்கிறோம் - இதுதான் தமிழ் மக்களின் நிலைப்பாடு என்பதை காண்பிப்பதற்காகவா முன்னணி அவசரப்படுகிறது?

இன்னும் எத்தனை காலத்துக்கு இவ்வாறு மாறிமாறி பொது ஆவணம், பொது இணக்கப்பாடு என்று கூறிக் கொண்டிருக்கப் போகிறீர்கள்? இதனை இன்னொரு வகையில் கேட்பதனால் - இன்னும் எத்தனை காலத்துக்குத் தமிழ் மக்களை அரசியலின் பெயரால் ஏமாற்றிக் கொண்டிருக்கப் போகிறீர்கள்?

இலங்கை தமிழ் அரசு கட்சி உருவாக்கப்பட்டு 77 ஆண்டுகள் சென்றுவிட்டன. இந்த 77 ஆண்டுகளாக பேசாத விடயத்தை - கையாளாத உபாயம் ஒன்றை இனித்தான் புதிதாகக் கண்டடையப் போகிறீர்களா? சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு புதிய அணுகுமுறைகள் பற்றி சிந்திப்பதும் அதற்காக உரையாடுவதும் தவறானது அல்ல. மாறாக, அது தேவையானது. ஆனால், பேசிய விடயங்களையே திரும்பப் திரும்ப பேசுவதற்காகப் புதிதாக ஒன்றுகூடி முடிவெடுப்பதாகக் கூறுவதுதான் தவறானது.

இந்த விடயத்தில் அரசியல் கட்சிகள் தங்களுடைய தேர்தல் ஆதிகத்தைக் கருத்தில் கொண்டு சிந்திப்பதைப் புரிந்து கொள்ளலாம். ஆனால், இவ்வாறான விடயங்களோடு சிவில் சமூகம் என்போரும் கருத்துருவாக்கிகள் என்போரும் மதத் தலைவர்கள் என்போரும் எவ்வாறு கேள்விகளற்று ஒத்தோடிக் கொண்டிருக்கின்றனர்?

### நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள்

# கழிவுகளை கொட்டியோரிடமிருந்து 4.2 இலட்சம் ரூபாய் தண்டப்பணம்

*யாழ்ப்பாணம், பெப். 13*

பொது இடங்களில் கழிவுகளை கொட்டியவர்களிடமிருந்து கடந்த 5 மாதங்களில் 4 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் அபராதமாக அறவிடப்பட்டுள்ளது என்று நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் ப. மயூரன் தெரிவித்துள்ளார்.

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் கழிவுகள் அதிகளவில் கொட்டப்படும் 11 இடங்கள் கண்காணிப்பு கமெரா மூலமாக கண்காணிக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து, அந்த இடங்களில் கழிவுகளை கொட்டியவர்கள் அடையாளப்படுத்தப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டது. இதனால், அந்தப் பகுதிகளில் கழிவுகளை கொட்டும் செயல்பாடு வெகுவாக குறைந்துள்ளது.

இந்த நிலையில், கழிவுகள் கொட்டப்படும் ஏனைய இடங்களும் கமெராக்கள் மூலம் கண்காணிக்கப்பட்டு, கழிவுகளை கொட்டுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (-5)

# தேசிய மக்கள் சக்தியை ஆதரித்த மாநகர உறுப்பினர் பதவிநீக்கம்!

*கொழும்பு, பெப். 13*

கொழும்பு மாநகர சபை உறுப்பினர் சோஹாரா புகாரி பதவியில் இருந்து உத்தியோகபூர்வமாக நீக்கப்பட்டுள்ளார் என்று தேர்தல்கள் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

கடந்த கொழும்பு மாநகர சபையின் வரவு - செலவுத் திட்ட வாக்கெடுப்பின் போது, கட்சியின் உத்தியோகபூர்வ தீர்மானத்துக்கு மாறாக சோஹாரா புகாரி தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவாக வாக்கு அளித்திருந்தார்.

இந்தச் செயல்பாடு கட்சி ஒழுக்கத்தை மீறும் செயல் என சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கருதியது. இதையடுத்து, கட்சியின் செயலாளரான நிசாம் காரியப்பர் எம்.பி. தலைமையில் ஒழுக்காற்று விசாரணை முன்னெடுக்கப்பட்டது. இறுதியில் அவரை கட்சியிலிருந்து நீக்குவதற்கு தீர்மானித்தது.

இதனையடுத்து கொழும்பு மாநகர சபை உறுப்பினர் சோஹாரா புகாரி பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் என்று தற்போது தேர்தல்கள் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

# பெண் உட்பட 13 பேர் கைது

*கொழும்பு, பெப். 13*

பொலிஸாரின் விசேட சுற்றிவளைப்பில் பெண் ஒருவர் உட்பட 13 பேர் போதைப்பொருட்களுடன் நேற்று கைது செய்யப்பட்டனர்.

கொழும்பு - மொறட்டுவை - அங்குலான பிரதேசத்தில் பொலிஸார், கடற்படை இணைந்து இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைதானவர்கள் 20 முதல் 30 வயதுக்குட்பட்டவர்களாவர். அவர்களிடமிருந்து 13.82 மில்லி கிராம் ஐஸ், 180 மில்லி கிராம் ஹெரோயின், போதை மாத்திரைகள் என்பன கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# கொக்கிளாய் - புல்மோட்டை பாலம் சாத்தியவள அறிக்கை தந்ததும் நிதி

## பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு




*முல்லைத்தீவு, பெப். 13*

கொக்கிளாய் - புல்மோட்டையை இணைக்கும் பாலத்தை அமைப்பதற்கான சாத்தியவள அறிக்கையை எதிர்வரும் மே மாதத்துக்குள் துறைசார்ந்தவர்கள் கையளித்தால் எதிர்வரும் 2027ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுமென போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் நகரஅபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடந்த ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் து.ரவிகரன் எம்.பி.யின் கோரிக்கைக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதேநேரம், எதிர்வரும் மே மாதத்துக்கு முன்னதாக கொக்கிளாய் - புல்மோட்டை இணைப்பு பாலத்துக்கான சாத்தியவள அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்று கூட்டத்தில் பங்கேற்றிருந்த வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி - 13 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம் - மாசி 01
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : சூன்ய



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
சந்திராஷ்டமம் நீடிப்பதால் சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகமாகும். வியாபாரத்தில் போட்டிகள் அதிகரிக்கும். மறைமுக விமர்சனங்கள் உண்டு.

**இடபம்**
தன் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள்.

**மிதுனம்**
கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி தங்கும். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். நன்மை நடக்கும் நாள்.

**கடகம்**
புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளின் வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தில் நல்ல செய்தி கேட்பீர்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். கனவு நனவாகும்.

**சிம்மம்**
எதிர்ப்புகள் அடங்கும். தாய்வழி உறவினர்கள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள்.சக ஊழியர்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள்.

**கன்னி**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்தும் தருவார்கள். மாறுபட்ட அணுகுமுறையால் முன்னேறும் நாள்.

**துலாம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். அழகும் இளமையும் கூடும். வியாபாரத்தில் வேலையாட்களின் ஆதரவு கிட்டும். முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். மனசாட்சிபடி செயல்படும் நாள்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். அலைச்சலும் மன குழப்பமும் அதிகரிக்கும். அதிருப்தியான சூழ்நிலை உருவாகும்.

**தனுசு**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. திடீர் பயணங்கள் மற்றும் செலவுகளால் திணறுவீர்கள். வாகனத்தில் கவனம் தேவை. வியாபாரத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து செல்லும்.

**மகரம்**
ஆன்மிகப் பெரியோரின் ஆசி கிட்டும். பெற்றோரின் ஆதரவு பெருகும். மற்றவர்களுக்காக சில வியாபாரத்தை பெருக்குவீர்கள். உங்களின் புதிய முயற்சிகள் பலிதமாகும். லாபம் பெரும் நாள்.

**கும்பம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். நண்பர்களால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். நன்மை நடக்கும் நாள்.

**மீனம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் நெளிவுசுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். புதிய மாற்றம் ஏற்படும்.

# “வேலைவாய்ப்புகளற்ற இளையோருக்கு தொழில் வழிகாட்டுதல்களை வழங்குக”

*யாழ்ப்பாணம், பெப். 13*

வேலைவாய்ப்புகளற்ற இளைஞர்- யுவதிகளுக்கு தொழில் வழிகாட்டுதல்களை வழங்குமாறு துறைசார்ந்த தரப்பினருக்கு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் அறிவுறுத்தியுள்ளார்.

காங்கேசன்துறையில் அமையவுள்ள முதலீட்டு வலயம் தொடர்பில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்ட சாத்தியப்பாடுகள் தொடர்பான கருத்துப் பகிர்வு- கலந்துரையாடலில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.



அரசாங்க அதிபர் மேலும் தெரிவிக்கையில், “யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வேலையற்ற பட்டதாரிகள் மற்றும் உயர்தர மற்றும் சாதாரண தரம் சித்தியடைந்த இளைஞர்- யுவதிகள் வேலைகளுக்கான எதிர்பார்ப்புடன் காத்திருக்கின்றனர். ஆனால், மாவட்டத்தில் பல தொழில்தருநர்களிடம் வேலைவாய்ப்புகள் காணப்படுகின்றன. மேலும், பல முதலீட்டாளர்கள் யாழ்ப்பாணத்தில் முதலீடு செய்யவுள்ளதால் வேலைவாய்ப்புகள் உருவாகவுள்ளன. தொழில் தருநர்களுக்கும் வேலையற்றிருப்பவர்களுக்கும் ஓர் இடைவெளி காணப்படுகிறது. ஆதலால் வேலையற்றவர்களுக்கான தொழில் வழிகாட்டுதல்களை வழங்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உண்டு”- என்றார்.

(எ)

அல்லைப்பிட்டியில் துப்பாக்கி சூடு!

# “சட்டத்தின் முன் அனைவரும் சமம்: நாம் உரிய நடவடிக்கை எடுப்போம்”

*யாழ்ப்பாணம், பெப். 13*

அல்லைப்பிட்டி துப்பாக்கிச் சூட்டு சம்பவம் குறித்து சட்டப்படி என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அவற்றை நாங்கள் எடுப்போம் என்று பாராளுமன்ற உறுப்பினர் சிறீ பவானந்தராஜா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வட்டுக்கோட்டை - இன்பச்சோலை வீதி புனரமைப்பில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

சட்டத்துக்கு முன் அனைவரும் சமம் என ஜனாதிபதியும் சொல்லியிருந்தார். சட்டப்படி என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ நாங்கள் அதை எடுப்போம். யாரில் பிழை இருக்கிறதோ அவர்களுக்கான தண்டனையை நாங்கள் கொடுப்போம். இந்த விடயத்தில் சட்டம் தனது வேலையை சரியாக செய்யும்.

பொலிஸாரோ, பாராளுமன்ற உறுப்பினர்களோ அல்லது பிரதேச சபை உறுப்பினர்களோ யார் பிழை செய்தாலும், யார் பிழை செய்தது என்பதை தீர்மானிக்க வேண்டியது நீதிமன்றம். எனவே, நீதிமன்றம் சரியான நடவடிக்கை எடுக்கும் என தெரிவித்தார்.

இதன்போது ஊடகவியலாளர் ஒருவர், “சங்கானை பிரதேச செயலர் பிரிவில் திடீர் பணக்காரர்கள் உருவாகியுள்ளதாகவும், அவர்கள் குறித்து நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் வலி மேற்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கூறினீர்கள். அது தொடர்பான முன்னேற்றம் என்ன?” என கேள்வி எழுப்பினார்.

அதற்கு பாராளுமன்ற உறுப்பினர் பதிலளிக்கையில்,

நாங்கள் இது தொடர்பான சில விவரங்களையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியுள்ளோம். அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும். ஒரு இரவிலோ அல்லது ஒரு கிழமையிலோ நடவடிக்கையை எடுக்க முடியாது. ஆறுதலாக நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார்.

(எ)

# 9 மாதங்களாக அதிபர் இன்றி இயங்கும் தாளையடி றோ. க. த. க. பாடசாலை

*யாழ்ப்பாணம், பெப். 13*

வடமராட்சி கிழக்கு தாளையடி றோ. க. த. க. பாடசாலை கடந்த ஒன்பது மாதங்களாக அதிபர் இன்றி இயங்கிவருவதாக மாணவர்களின் பெற்றோர் கவலை வெளியிட்டுள்ளனர்

கடந்த பல வருடங்களாக குறித்த பாடசாலையில் அதிபராக கடமையாற்றியவர் பணி ஓய்வு பெற்றுள்ள நிலையில், கடந்த ஒன்பது மாதங்களாக அதிபர் இன்றி பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாளையடி றோ.க.த.க பாடசாலைக்கு புதிய அதிபரை நியமிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநரை சந்தித்து, தாளையடி புனித அந்தோனியார் ஆலய பங்குத்தந்தை ஆதர் ஜஸ்ரின் கோரிக்கை விடுத்திருந்த போதிலும் புதிய அதிபர் இதுவரை நியமிக்கப்படவில்லை.

மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு தாளையடி றோ.க.த.க பாடசாலைக்கு விரைவாக புதிய அதிபரை நியமிக்குமாறு பெற்றோர் வலியுறுத்தியுள்ளனர்.

(எ-08)





வடமராட்சி கிழக்கு அம்பன் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி பாடசாலை அதிபர் ம. மகாகேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல மருத்துவமனைகளிலும் மாதமொருமுறை மீளாய்வு!

## பிரதி சுகாதார அமைச்சர் வலியுறுத்து

கொழும்பு, பெப். 13

நாட்டிலுள்ள அனைத்து அரச மருத்துவமனைகளிலும் மாதம் ஒரு முறையாவது மருந்து மீளாய்வுக் கூட்டங்களை நடத்துவது அவசியம் என்று சுகாதார பிரதி அமைச்சர் ஹன்சக விஜயமுனி தெரிவித்துள்ளார்.

மாத்தறை பொது மருத்துவமனைக்கு கண்காணிப்பு பயணம் சென்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், ஒவ்வொரு மருத்துவமனையிலும் மாதம் ஒரு முறையாவது மருந்து மீளாய்வுக் கூட்டங்களை நடத்துவதன் மூலம், மருத்துவமனைகளில் கையிருப்பிலுள்ள மருந்துகள் குறித்த முழுமையான விபரங்களை முன்வைக்க தலைமை மருந்தாளருக்கு வாய்ப்புக் கிடைக்கிறது. இதன் ஊடாக வைத்தியசாலை பணிப்பாளர் உள்ளிட்ட நிர்வாக அதிகாரிகளுடன் இணைந்து மருந்துத் தட்டுப்பாடு ஏற்படும் அபாயத்தை முற்கூட்டியே இனங்காண முடியும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் பிராந்திய கொள்வனவுகள் மூலம் மருந்துகளைக் கொள்வனவு செய்து, நோயாளர் பராமரிப்பு சேவைகளுக்கு தடையின்றி மருந்துகளை வழங்க முடியும். இதற்கு மேற்படி கூட்டங்களை நடத்துவது மிகவும் அவசியமானது.

மருத்துவமனைகளில் எதிர்காலத் தேவைக்குத் தேவையான மருந்துகளை எப்போதும் கையிருப்பில் வைத்திருப்பது, மருந்து விநியோகத்தில் ஏற்படும் சிக்கல்களுக்கு ஒரு சாதகமான தீர்வாகும். சுகாதார அமைச்சின் மருத்துவ வழங்கல் பிரிவின் ஊடாக மருந்து விநியோக வலையமைப்பை சீரமைக்க நாம் தொடர்ச்சியாக நடவடிக்கை எடுத்து வருகிறோம் - என்றார். (எ)

# சுகாதார சீர்கேட்டுக்காக 17 உணவகங்களுக்கு "சீல்"

கொழும்பு, பெப். 13

சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கிய 17 உணவு கையாளும் நிலையங்கள் பொதுச் சுகாதார பரிசோதகர்களால் மூடப்பட்டுள்ளன.

அம்பாந்தோட்டையின் பெலியத்த நகரம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் உள்ள உணவகங்களே இவ்வாறு மூடப்பட்டன.

நேற்றுமுன்தினம் 50இற்கும் மேற்பட்ட உணவு கையாளும் நிலையங்கள் சோதனையிடப்பட்டன. இதில், 17 உணவகங்கள் சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கியமை கண்டறியப்பட்டது. இதையடுத்து அவை தற்காலிகமாக மூடப்பட்டன. (ஐ)

# 2 கோடி பெறுமதியான சொத்துகள் முடக்கம்!

கொழும்பு, பெப். 13

போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் தற்போது சிறையில் உள்ள தீகல சமன் எனப்படும் அஜித் பெரேரா என்பவரின் சொகுசு வீடொன்றை சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவு முடக்கியுள்ளது.

சுமார் 2 கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியுடைய குறித்த வீடு கொழும்பு - அவிசாவளை - தெஹியோவிட்ட பகுதியில் அமைந்துள்ளது.

அந்த வீட்டை அவர் தனது கள்ளக்காதலிக்கு கொடுத்திருந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரால் அந்த வீட்டை கொள்வனவு செய்வதற்காக பணம் பெற்ற வழியை தெளிவுபடுத்த முடியாமல் போனதால் அது போதைப்பொருள் கடத்தல் மூலம் ஈட்டிய பணத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. (எ)

# விலங்குகளின் தோல்களுடன் கட்டுநாயக்காவில் ஒருவர் கைது

கொழும்பு, பெப். 13

உலர்த்தப்பட்டு, வர்ணம் தீட்டப்பட்டு சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட விலங்குகளின் தோல்களுடன் நபர் ஒருவர் நேற்று முன்தினம் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுங்க அதிகாரிகள் மற்றும் சுங்கத் திணைக்களத்தின் பல்லுயிர், கலாசார மற்றும் தேசிய மரபுரிமைகள் பாதுகாப்பு பிரிவின் அதிகாரிகளால் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பணப்பைகள் தயாரிப்பதற்காகக் கொண்டு வரப்பட்ட முதலைகள், மலைப்பாம்புகள் மற்றும் ஏனைய ஊர்வனவற்றின் 19 தோல்கள் சந்தேகநபரிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன. இவற்றை அவர் தாய்லாந்திலிருந்து கொண்டு வந்திருந்தார் என்று விசாரணைகளில் தெரிய வந்தது.

கொழும்பைச் சேர்ந்த 37 வயதுடைய வர்த்தகரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

# வெளிநாட்டில் வேலை வாய்ப்பெனக்கூறி மோசடியில் ஈடுபட்ட தம்பதியர் கைது!

கொழும்பு, பெப். 13

வெளிநாட்டில் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி ஒரு கோடி 80 இலட்சம் ரூபாய்க்கும் அதிக தொகையை மோசடி செய்த தம்பதியர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விசேட விசாரணை பிரிவு அதிகாரிகளால் கம்பஹா - சீதுவையில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் பணியகத்தின் அனுமதிப்பத்திரம் இன்றி வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரகம் ஒன்றை நடத்தி வந்திருந்தனர்.

இந்த நிறுவனத்தின் மோசடி குறித்து பாதிக்கப்பட்டவர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விசேட விசாரணை பிரிவுக்கு அளித்த முறைப்பாடுகளையடுத்தே இந்தத் தம்பதியர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

# காட்டு யானை தாக்கியதில் வெளிநாட்டு பெண் காயம்!

கொழும்பு, பெப். 13

காட்டு யானை தாக்கியதில் வெளிநாட்டு பெண் ஒருவர் காயமடைந்துள்ளார். வீதியில் நின்ற காட்டு யானையை புகைப்படம் எடுக்க முயன்றபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ரஷ்யாவை சேர்ந்த 45 வயது பெண்ணே காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் புத்தல - கதிர்காமம் வீதியில் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த பெண் கதிர்காமம் பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அம்பாந்தோட்டை பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ஐ)

# விபத்துகளில் மூவர் மரணம்

கொழும்பு, பெப். 13

நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற வாகன விபத்துக்களில் மூன்று பேர் உயிரிழந்தனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

மாத்தளை - இப்பன்கட்டுவ பகுதியில் அம்பேபுஸ்ஸ - திருகோணமலை வீதியில் இரு வாகனங்கள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

இந்த விபத்தில் தம்புள்ளையை சேர்ந்த 38 வயது நபரே உயிரிழந்தார்.

இதேவேளை, அநுராதபுரம் - தம்புத்தேகம - கோன்வெவ பகுதியில் பாதெனிய - அநுராதபுரம் வீதியில் முச்சக்கர வண்டியும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் ஒருவர் உயிரிழந்தார்.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்திய நன்னேரியா பகுதியை சேர்ந்த 54 வயதுடைய நபரே உயிரிழந்தார்.

கொழும்பு - மொறட்டுவையில் உஸ்வத்த சுற்றுவட்ட வீதியில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளொன்று பாதசாரியான பெண்ணை மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இதில், மொறட்டுவையை சேர்ந்த 73 வயதுடைய பெண்ணே உயிரிழந்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத குடியேற்றங்கள் இனி முன்னெடுக்கப்படாது!

**பாராளுமன்ற உறுப்பினர் பிரபு உறுதி**

மட்டக்களப்பு, பெப். 13

இனப்பரம்பலை மாற்றும் சட்டவிரோத குடியேற்றங்கள் எமது ஆட்சிக்காலத்தில் முன்னெடுக்கப்படாது என்று தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு தெரிவித்தார்.

வடக்கு மக்கள் மீது நம்பிக்கையையும் நல்ல பாசத்தையும் ஜனாதிபதி கொண்டுள்ளதன் காரணமாக பெருமளவான அபி



விருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

மட்டக்களப்பு - வெல்லாவெளியில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த ஆட்சிக்காலத்தில் இனப்பரம்பலை மாற்றும் சட்டவிரோத குடியேற்றங்கள் முன்னெடுக்கப் பட்டபோதிலும் எமது ஆட்சிக்காலத்தில் அவ்வாறான செயல்பாடுகள் முன்னெடுக்கப்படாது"- என்றார். (எ)

# நிந்தவூர் பிரதேசத்தின் அபிவிருத்தி குழு கூட்டம்

நிந்தவூர், பெப். 13

அம்பாறை- நிந்தவூர் பிரதேசத்துக்கான அபிவிருத்தி குழுக் கூட்டம் நிந்தவூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் கல்வி, சுகாதாரம், விவசாயம், மீன்பிடி, மின்சாரம், வீதி அபிவிருத்தி போன்ற பல்வேறு துறைகளில் காணப்படும் பல வேலைத் திட்டங்கள் முன்வைக்கப்பட்டன.

அல்லிமூலை தொடக்கம் மல்கம்பிட்டி சந்தி வரைக்கும் புதிய மின்சார இணைப்பை பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

நிந்தவூர் மதீனா மகா வித்தியாலயத்தின் முன் பகுதியால் மழை காலங்களில் நடந்து பாடசாலைக்குள் மாணவர்கள், ஆசிரியர்கள் வர முடியாத நிலை காணப்படுகிறது.

உடனடியாக அதற்குரிய உள்ளக வீதியை செப்பனிட வேண்டும் போன்ற திட்டங்கள் முன்வைக்கப்பட்டன. (எ)

# கல்முனை மாநகர சபையில் உத்தியோகத்தர் கௌரவிப்பு



கல்முனை, பெப். 13

அம்பாறை- கல்முனை மாநகர சபையில் கடமையாற்றி, அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றுச் சென்ற வருமானப் பரிசோதகர் ஏ. ஜே. சமீம் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர் எஸ். இராசன் ஆகியோருக்கான பிரியாவிடை மற்றும் கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை மாநகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கல்முனை மாநகர சபையின் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் என். பரமேஸ்வர வர்மன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாநகர சபை ஆணையாளர் எம். றாபி பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார். (எ)

# மத்திய, கிழக்கு மாகாணங்களில் அவ்வப்போது மழை பெய்யக்கூடும்

கொழும்பு, பெப். 13

மத்திய, ஊவா, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் அவ்வப்போது மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று அதிகாலை வெளியிட்டுள்ள வானிலை முன்னறிவிப்பில் தெரிவித்துள்ளது.

இதன்படி, நுவரெலியா, மாத்தளை, பதுளை மற்றும் பொலநறுவை ஆகிய மாவட்டங்களின் சில இடங்களில் 50 மில்லி மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும்.

வடமாகாணத்தில் சில தடவைகள் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் பிற்பகல் 2 மணிக்கு பின்னர் ஆங்காங்கே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சில இடங்களில் 50 மில்லி மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் காலை வேளையில் சில இடங்களில் பனிமூட்டமான நிலை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் தற்காலிக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய ஆபத்துகளை குறைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ)

# தொழிலாளர்களின் போராட்டம் வெற்றி

நுவரெலியா, பெப். 13

மஸ்கெலியா கவரவில தோட்டத் தொழிலாளர்களின் போராட்டம் வெற்றி பெற்றுள்ளது.

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாமிமலை, கவரவில தோட்டத்தில் பணிநீக்கம் செய்யப்பட்ட எட்டு தொழிலாளர்களும் தமது உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்று டன் நிறைவு செய்தனர்.

தோட்ட நிர்வாகம் குறித்த 8 தொழிலாளர்களையும் மீண்டும் வேலைக்கு அனுமதிப்பதாக கடிதம் மூலம் உத்தியோகபூர்வமாக அறிவித்ததையடுத்து இந்தப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது

போராட்டத்தில் ஈடுபட்ட மூவர் மயக்கமுற்ற நிலையில் மஸ்கெலியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இதனையடுத்து நேற்றுக் காலை 8 தொழிலாளர்களையும் வேலைக்கு அனுமதிப்பதாக எழுத்து மூலம் அறிவித்ததை அடுத்து போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. (எ)

# அம்பாறை மேல் நீதிமன்ற நீதிபதிக்கு எதிரான வழக்கு மறுதவணை விதிப்பு

கல்முனை, பெப். 13

அம்பாறை மேல் நீதிமன்ற நீதிபதி ஜெயலட்சுமி டி சில்வாவுக்கு எதிரான வழக்கு நேற்று முன்தினம் கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் மேலதிக விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

குறித்த வழக்கானது கல்முனை நீதிமன்ற நீதிவான் எம். சாஜித் முன்னிலையில் மன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வேளை சந்தேகநபரான நீதிபதியிடம் இருந்து வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் பொலிஸாரின் வழக்கு கோவை சட்ட ஆலோசனைக்காக சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் வழக்குத் தொடுநரான பெரியநீலாவணை பொலிஸார் நீதிமன்றுக்கு தெரி வித்தனர்.

இந்த வழக்கானது மீண்டும் 11. 03. 2026 அன்று சட்டமா அதிபரின் ஆலோசனைக்காகவும் மேலதிக விசாரணைகளுக்காகவும் அழைக்கப்பட திகதியிடப்பட்டுள்ளது. (எ-01)

# "வழக்குகள் முடிந்த பின்னரே தமிழரசு பொதுக்குழு கூட்டம்"

மட்டக்களப்பு, பெப். 13

வழக்குகள் முடிந்த பின்னரே தமிழ் அரசு கட்சியின் பொதுக் குழு கூட்டம் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற குழு தலைவர் பதவி தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் எந்த கலந்தாலோசனையும் செய்யாமல் அரசியல்குழு, பாராளுமன்ற குழு தலைவரை தெரிவுசெய்து, எங்களிடம் செய்தியாக தெரிவித்துள்ளது என்று தமிழ் அரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞா. சிறிநேசன் தெரிவித்தார்.

எட்டுப் பாராளுமன்ற உறுப்பினர்களும் இணைந்தே பாராளுமன்ற குழு தலைவரை தெரிவு செய்ததாகவும், ஆனால் தற்போது



அதனை அரசியல்குழு செய்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு- வெல்லாவெளியில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கை தமிழ் அரசுக்கட்சியின் பொதுக்குழு கூட்டம் கூட்டப்படுவது தொடர்பில் கேட்டபோது, தற்போது நீதிமன்றில் வழக்குகள் உள்ளதால் அவை முடிவுறுத்தப்பட்டதன் பின்னரே பொதுக்குழு கூட்டத்தை நடத்த முடியும் என்றார். (எ)

# பெப்ரவரி 14இல் கண்டி நகரில் இரவு சந்தை, களியாட்ட விழா

கண்டி, பெப். 13

வழக்கம் போன்று இவ்வருடமும் கண்டி நகரில் இரவுச் சந்தைகளையும் களியாட்ட விழாக்களையும் முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று மத்திய மாகாண ஆளுநர் சரத் அபேகோன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். உள்ளூர் மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் இவ்விழாவின் செயல்பாடுகள் அமையவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த விழாவானது "கண்டி பிரீஸ் நைற் பெஸ்டிவல் 2026" என அழைக்கப்படவுள்ளது. பெப்ரவரி 14ஆம் திகதி சனிக்கிழமை, கண்டி யட்டிநுவர வீதியை மையமாக கொண்டு ஆரம்பிக்கப்படவுள்ளது. அன்றைய தினம் மாலை 06. 30 மணி முதல் இரவு 12. 00 மணி வரை இவ்விழா நடைபெறவுள்ளது.

இந்த விழாவை முன்னிட்டு கண்டி நகரின் குறித்த பகுதிகளில் விசேட பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (எ)

# மாகாண சபை தேர்தலை உடன் நடத்த வேண்டும்

சாய்ந்தமருது, பெப். 13

நீண்ட காலமாக நிலுவையில் உள்ள மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்த அரசாங்கம், நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சிறிலங்கா ஜனநாயக கட்சி வலியுறுத்தியுள்ளது.

இந்த கட்சியின் பேராளர் மாநாடு நேற்று அம்பாறை- சாய்ந்தமருதில் நடைபெற்றது. இதன்போதே மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. அத்தோடு, நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலை, மக்கள் எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் ஜனநாயகத்தை வலுப்படுத்துவதன் அவசியம் குறித்து கட்சியின் பொதுச்செயலாளர் அன்வர் முஸ்தபா வலியுறுத்தினார்.

மேலும், இளைஞர் மற்றும் பெண்களின் அரசியல் பங்கேற்பை அதிகரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். (எ-06)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர்த்த...

மற்றும் உள்ளூராட்சி அமைச்சால் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ இல்லங்களில் நீதிமன்றங்களை நிறுவும் பணிகளை நேற்றைய தினம் நேரில் பார்வையிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேபோல், நீதிமன்றங்களை நிறுவுவதற்காகப் பொறுப்பேற்கப்பட்டுள்ள ஏனைய முன்னாள் அமைச்சர்களின் உத்தியோகபூர்வ இல்லங்களிலும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை விரைவாக வழங்குமாறும் அவர் வலியுறுத்தினார்.

ஊழல் எதிர்ப்புச் செயல் திட்டத்தின் (2025-2029) கீழ் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சுக்கான பணிகளை செயல்படுத்தவும் வழக்கு விசாரணைகளை விரைவுபடுத்தவும் நான்கு முன்னாள் அமைச்சர்களின் உத்தியோகபூர்வ இல்லங்கள் தற்காலிகமாக வழங்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## முதல்...

சென்றவேளை ஜீப்பில் வந்த பொலிஸாராலேயே துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. வாகனத்தை நிறுத்திய பின்னரே துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது. அந்த பொலிஸார் எனது மகனிடம் அவர்கள் கொத்து ரொட்டி, சிகரெட் என்பவற்றை வழக்கமாக பெற்றுக் கொள்பவர்களாம்.

இன்று (நேற்று) எமது வீட்டுக்கு வந்த பொலிஸார் போராட்டம் செய்ய வேண்டாம் என்று மறித்தனர். பொலிஸார் காட்டிய இடத்திலேயே புதைகுழி வெட்டி, எனது மகனின் சடலத்தை புதைத்துள்ளோம். அந்த இடத்தில் கிடங்குவெட்டியவேளை தண்ணீர் வந்தது. அந்த இடத்திலேயே புதைத்துள்ளோம்.

எனது மகன்மீது துப்பாக்கிச் சூடு மேற்கொண்டது இரவு 1.30 மணிக்கு என்று செல்லப்படுகிறது. ஆனால், அதிகாலை 5.30 மணிக்கே அவரின் சடலம் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டது. ஓரிடத்தில் வைத்து துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது. ஆனால், வேறோர் இடத்துக்கு சடலம் இழுத்து செல்லப்பட்டு போடப்பட்டது.

எனது மகனோடு சென்ற இருவர் கைது செய்யப்பட்ட நிலையில், அவர்களை சித்திரவதை செய்துள்ளார்கள். அவர்களின் உடற்பகுதியில் அடி காயங்கள் உள்ளன. கஞ்சா வழக்கு மற்றும் வேறு வழக்குகளை அவர்கள்மீது பதிவு செய்யப்போவதாகக் கூறி மிரட்டினார்களாம்.

முதல் சூட்டிலேயே அவர் மயங்கினார் என்று கூட இருந்தவர்கள் கூறுகிறார்கள். அதன்பின்னரே ஏனைய துப்பாக்கி சூடுகள் இடம்பெற்றுள்ளன. இது திட்டமிட்ட ஒரு கொலை. எனது பிள்ளையை கொலை செய்தவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும் - என்றார். (-03 -05)

## துப்பாக்கி...

அல்லைப்பிட்டியில் கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை பொலிஸார் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் அல்பினோ அருள்பயாஸ் (வயது 17) என்ற சிறுவன் உயிரிழந்தார்.

உயிரிழந்த சிறுவனின் இறுதிக்கிரியைகள் நேற்று வட்டுக்கோட்டை - சித்தங்கேணியிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்றது. தொடர்ந்து இறுதிஊர்வலம் நடைபெற்றபோது உறவினர்கள் சடலத்துடன் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இறுதி ஊர்வலம் சங்கரத்தை சந்தியை அடைந்த போது அங்கு பெருமளவிலான பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். பொலிஸாரை கண்டதும் உறவினர்கள் கோபமடைந்து, “எங்களையும் சுடுங்கள்”, “எங்கள் பிள்ளையை நாசமாக்கி விட்டீர்களே”, என்று கூறி கதறியழுதனர். அத்துடன்,”பொலிஸாரை கைது செய்”, “எமது பிள்ளைக்கு நீதி வேண்டும்”, “பொலிஸாரின் அராஜகம் தொடர்கிறது” என்று கோஷமிட்டனர். உணர்ச்சிவசப்பட்டவர்களாக மண்ணை அள்ளவீசி திட்டினர். சிலர் பொலிஸாரை தள்ளவிட்டும் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இந்தச் சம்பவங்களால் இரு தரப்பினரிடையேயும் முறுகல் நிலை ஏற்பட்டது. எனினும், அங்கிருந்தவர்களால் நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இந்த நிலைமையால் அந்தப் பகுதி சில மணி நேரம் இயல்பை இழந்ததுடன், போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது.

## சி.ஐ.டியின்...

4 ஆம் மாடிக்கு சென்றால் சந்தேக நபர்கள் மிக மோசமாக பார்க்கப்படுகிறார்கள். அவர்களுக்கு அமர்வதற்குக் கதிரைகூடக் கிடைப்பதில்லை. இன்றும் அவ்வாறான தன்மையே காணப்படுகிறது.

இவ்வாறான பின்னணியில் மனித குலத்துக்கு எதிரான வகையில் உத்தேச பயங்கரவாதத்தில் இருந்து அரசை பாதுகாக்கும் சட்டவரைவை அரசாங்கம் தயாரித்துள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக இரத்துச் செய்து மனிதநேயமிக்க சட்டத்தை உருவாக்குமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறோம் - இவ்வாறு ஊடகம் ஒன்றுக்கு அவர் வெளியிட்ட கருத்தில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## இலங்கை...

தெரிவித்துள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான புதிய பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள ஷானன் கவுலின் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவை சந்தித்து கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

இந்தக் கலந்துரையாடலில் “டிட்வா” சூறாவளியினால் ஏற்பட்ட அனர்த்தங்கள் குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்பட்டதுடன், பாதிக்கப்பட்ட பகுதிகளை இயல்பு நிலைக்குக் கொண்டுவருதல் மற்றும் மறுசீரமைப்புப் பணிகளை விரைவுபடுத்துவதற்காக அரசாங்கம் ஆரம்பித்துள்ள திட்டங்கள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. (ஐ)

## தரமான...

ஆசிரியர்கள் வழங்கும் பங்களிப்பை அரசாங்கம் பெரிதும் மதிக்கிறது. ஆசிரியர்களின் தொழில்சார் கௌரவத்தை பாதுகாப்பதற்கும், தரமான கல்வியை உறுதிப்படுத்துவதற்கும் “கல்வி சபை” ஒன்றை நிறுவுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பாடசாலைகளுக்கு இடையிலான உட்கட்டமைப்பு வசதிகளில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளை நீக்கி அனைத்து பிள்ளைகளுக்கும் சமமான வாய்ப்புகளை வழங்குவதே அரசாங்கத்தின் இலக்காகும் - என்றும் அவர் இதன்போது கூறினார்.

நேற்றைய தினம் அம்பாந்தோட்டை மாவட்டத்துக்கு சென்ற பிரதமர் ஹரிணி அமரசூரிய பாடசாலை ஒன்றின் செயல்பாடுகளை பார்வையிட்ட பின்னர் மேற்கண்ட விடயங்களை தெரிவித்தார்.

## கடவுச்சீட்டு...

- குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தின் தொழில்நுட்ப அமைப்பில் ஏற்பட்ட கோளாறாலேயே இந்த இடைநிறுத்தம் ஏற்பட்டுள்ளது என்றும் தொழில்நுட்ப அமைப்பை மீட்டெடுக்க தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்ப டுகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டது.

## விபத்துகளில்...

அதிபர் டபிள்யூ. பி. ஜே. சேனாதீர தெரிவித்துள்ளார்.

2025ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் விபத்துகளின் எண்ணிக்கை 24ஆலும் மரணங்களின் எண்ணிக்கை 27ஆலும் அதிகரித்துள்ளது.

இந்த ஆண்டு நடந்த விபத்துகளில் உயிரிழந்தவர்களில் 36 சதவீதமானோர் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள், 32 சதவீதத்தினர் பாதசாரிகள்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் மாத்திரம் வீதி விபத்துகளால் 15 ஆயிரத்து 68 பேர் உயிரிழந்தனர். 2020 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் மரணங்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்தையும்விட அதிகமாகவே பதிவாகியுள்ளது என்றும் அவர் மேலும் கூறினார்.

## பாராளுமன்ற...

சட்டமூலம் தொடர்பான இரண்டாவது மதிப்பீட்டு விவாதம் 2026 பெப்ரவரி 17ஆம் திகதி நடைபெறவுள்ளது.

உத்தேச சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால், சட்டமூலத்தின் 3ஆம் பிரிவுக்கு அமைய, இந்தச் சட்டம் நடைமுறைக்கு வரும் தினத்துக்கு முன்னதாக ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடைய மற்றும் ஓய்வூதியம் பெறும் நபர்களுக்கு, இந்தச் சட்டம் நடைமுறைக்கு வரும் தினத்தில் இருந்து ஓய்வூதியம் நிறுத்தப்படும்.

இந்தக் குழுவின் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான சந்தன சூரியாராச்சி, தர்மப்பிரிய விஜயசிங்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர்களான எம். கே. எம். அஸ்லம், ஜே.டி. சூரியபண்டார ஆகியோர் மெய்நிகர் வழியே பங்கேற்றனர்.

## மிகமோசமான...

கொண்டிருக்கின்றார். அது மாத்திரமின்றி அவர் மீது ஊழல், மோசடி குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. எனவே, தேசிய மக்கள் சக்தியினர் அனைவரும் தூய்மையானவர்கள் என இனி ஜனாதிபதி உட்பட எவராலும் பெருமை பேசிக் கொண்டிருக்க முடியாது - இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி பணிமனையில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

“பாராளுமன்றத்தில் தற்போதுள்ள சபாநாயகரே இலங்கை வரலாற்றில் மிகவும் மோசமான சபாநாயகர் ஆவார். பாகீர் மாக்கார், கரு ஜயசூரிய போன்ற சபாநாயகர்களின் செயல்பாடுகளை நாம் பார்த்திருக்கிறோம். அவர்கள் மிகவும் சுயாதீமான முறையில் பாராளுமன்ற செயல்பாடுகளை நிர்வகித்திருக்கின்றனர்.

தற்போதைய சபாநாயகருடன் ஒப்பிடுகையில் ராஜபக்ஷ குடும்பத்தின் சமல் ராஜபக்ஷவின் செயல்பாடுகள் இவற்றைவிட சிறந்தது எனக் கூறலாம். அதேவேளை மகிந்த யாப்பா அபேவர்த்தன முற்று முழுதாக பக்க சார்பாகவே செயல்பட்டார். தற்போதைய சபாநாயகர் அவரை விடவும் மோசமானவர்.

அவரின் செயல்பாடுகள் தொடர்பில் இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது. இந்த முறைப்பாடு தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் பட்சத்தில் அவர் சபாநாயகர் பதவியிலிருந்து விலக வேண்டும். அரசமைப்பின் 41 - அ உறுப்புரைக்கமைய அரசமைப்பு பேரவையின் தலைவர் சபாநாயகர் ஆவார். இதன் ஊடாகவே இலஞ்சம், ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் தலைவர் தெரிவு செய்யப்படுகிறார். அவ்வாறிருக்கையில் இவர் தொடர்ந்தும் பதவியில் நீடித்தால் எவ்வாறு சட்டம் பக்கசார்பின்றி நடைமுறைப்படுத்தப்படும் என்று நம்புவது?

ஜனாதிபதியும் 159 பாராளுமன்ற உறுப்பினர்களும் சட்டம் அனைவருக்கும் சமமானது எனக் கூறிப் பெருமை பேசிக் கொண்டிருக்க முடியாது. தேசிய மக்கள் சக்தியில் அனைவரும் தூய்மையானவர்கள் எனக் கூறினர். ஆனால், அனைவரும் அவ்வாறானவர்கள் அல்ல.

தற்போது அரசாங்கத்திலுள்ள பெரும்பாலானவர்கள் மீது ஊழல், மோசடி குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. பலர் சட்டத்தை மீறி செயல்படுகின்றனர். பொய் கூறுவதற்கு ஒலிம்பிக் போட்டி நடத்தினால் ஜனாதிபதி அதில் தங்கப் பதக்கத்தை வெல்வார். ஏனையோர் வெள்ளி மற்றும் வெண்கலப்பதங்களை வெல்வர்.

இவற்றுக்கு மக்கள் தங்கள் எதிர்ப்பை வெளியிட வேண்டும். மக்கள் வரிப்பணம் தான் இவர்களால் இவ்வாறு சட்ட விரோதமாக பயன்படுத்தப்படுகிறது. பொய் கூறும் போட்டில் மாத்திரமல்ல, நடிப்பு போட்டியிலும் தென்னிந்திய நடிகர்களை எமது ஜனாதிபதி வென்றுவிட்டார் - என்றார்.

## ரணில்...

முன்னெடுக்கப்பட்ட திட்டங்கள், சுற்றுநிருபங்கள் சட்டவிரோதமானவை என்று கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போதே, உயர்நீதிமன்றம் மேற்கண்ட உத்தரவை பிறப்பித்தது.

இந்த மனுவை விமானப் படையின் ஓய்வுபெற்ற விசேட தேவையுடையவரான சாந்த ஜெயதிலக தாக்கல் செய்துள்ளார். இதனை, பிரதம நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன, நீதியரசர்களான, ஷிரான் குணரத்ன மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகிய மூவர் கொண்ட உயர் நீதிமன்ற அமர்வு நேற்று பரிசீலித்தது.

இதன்படி, மனு ஜூலை 20 ஆம் திகதி மீண்டும் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்து ஒரு வாரத்துக்குள் பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக முன்னாள் ஜனாதிபதிகளான மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க, தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க சார்பில் சட்ட மாஅதிபர், மகளிர் விவகார அமைச்சர், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்டோர் பெயரிடப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு

# பாடசாலை மதில் இடிந்து 3 மாணவர்கள் படுகாயம்

கொழும்பு, பெப். 13

டோசர் இயந்திரம் பாடசாலை மதிலை மோதியதில் மதில் இடிந்ததில் 3 மாணவர்கள் படுகாயமடைந்தனர்.

நேற்று வியாழக்கிழமை கொழும்பு - பொரளையில் உள்ள பாடசாலை ஒன்றில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது அங்கிருந்த மூன்று மாணவர்கள் படுகாயமடைந்தனர். அவர்கள் உடனடியாக கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பொரளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# நடிகை பியூமியின் மகன் உட்பட ஏழு பேருக்கு விளக்கமறியல்!

கொழும்பு, பெப். 13

இராஜகிரியவில் உள்ள வாகனம் பழுதுபார்க்கும் நிலையத்தில் இளைஞர் ஒருவரை தாக்கிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட நடிகை பியுமி ஹன்சமாலியின் மகன் உட்பட 7 சந்தேக நபர்களை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இராஜகிரிய பகுதியிலுள்ள வாகன பழுதுபார்க்கும் நிலையத்தில் இளைஞர் ஒருவரை மற்றுமோர் இளைஞர் தாக்கும் காணொலி அண்மையில் சமூக வலைதளங்களில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் வெலிக்கடை பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் 7 பேர் கைது செய்யப்பட்டனர். 19 - 22 வயதுக்கு உட்பட்ட இளைஞர்களே இவ்வாறு கைதாகினர். இதில், நடிகை பியூமி ஹன்சமாலியின் மகனும் உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

கைதானவர்கள் நேற்றுமுன்தினம் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். இதன்போதே அவர்கள் அனைவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

# தண்ணீருடன் தொடர்புடைய விபத்துகளால் 24 பேர் மரணம்

கொழும்பு, பெப். 13

தண்ணீருடன் தொடர்புடைய விபத்துகளால் இந்த ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் 24 பேர் உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனால், பொதுமக்களின் பாதுகாப்புக்காக தண்ணீர் தொடர்புடைய விபத்துக்கள் அதிகமாக இடம்பெறும் பிரதேசங்களை இலக்காகக் கொண்டு உயிர்காக்கும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எவ். யூ. வூட்லர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்தார். (ஐ)

# கேரள முதலமைச்சரை சந்தித்தார் ரில்வின்

கொழும்பு, பெப். 13

ஜே. வி. பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் மற்றும் அமைச்சர்களை நேற்று முன்தினம் சந்தித்தார்.

இந்த சந்திப்பின்போது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் எம். ஏ. பேபி மற்றும் மத்திய குழுவின் உறுப்பினர்கள் பலரும் பங்கேற்றிருந்தனர்.

சந்திப்பில், மக்களின் நலனுக்காக, கேரளாவில் செயல்படுத்தப்படும் திட்டங்கள், கல்வியறிவை 100 சதவீதமாக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், தீவிர வறுமையை ஒழிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து பேசப்பட்டன.

அத்துடன், இலங்கையுடனான ஒத்துழைப்பு மற்றும் பல்வேறு துறைகளில் பரஸ்பர வளர்ச்சிக்கான வாய்ப்புகள், இரு கட்சிகளுக்கும் இடையிலான உறவுகளை மேம்படுத்துதல் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இந்திய கலாசார உறவுகள் குழுவின் அழைப்பின் பேரில் இந்தியா சென்றுள்ள ரில்வின் சில்வா பல்வேறு சந்திப்புகளில் ஈடுபட்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தென்னக்கோனின் நியமனத்துக்கு எதிரான வழக்கு விசாரணை நிறைவு

கொழும்பு, பெப். 13

முன்னாள் பொலிஸ் மாதிபர் தேசபந்து தென்னக்கோனின் நியமனத்தை சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள்மீதான விசாரணையை நேற்றைய தினம் உயர் நீதிமன்றம் நிறைவு செய்தது.

இந்த வழக்குகளுடன் தொடர்புடையதாக ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த சத்தியக்கடதாசியில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டும் மனுதாரர் தரப்பின் இணக்கத்துடனும் மனு மீதான விசாரணையை முடிவுக்குக் கொண்டுவர நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

நீதியரசர்கள் பிரீதி பத்மன் சூரசேன, அச்சல வெங்கப்புலி, மகிந்த சமயவர்த்தன ஆகியோர் அடங்கிய மூவரடங்கிய உயர்நீதிமன்ற நீதியரசர்களின் அமர்வு முன்னிலையில் இந்த மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. (ஐ)

# துப்பாக்கி மீட்பு

கொழும்பு, பெப். 13

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பெண் சந்தேகநபர் வழங்கிய இரகசிய தகவலின் அடிப்படையில் துப்பாக்கியை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ள விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள பெண்ணின் தகவலின்படி கல்கிசையில் வீடு ஒன்று சோதனையிடப்பட்டது.

இதன்போதே, ஐஸ் போதைப் பொருள், 8 இலட்சம் ரூபாய், ஒரு துப்பாக்கி, தங்க நகைகள் என்பன கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

# இந்தியாவில் ஹிந்தி மொழி கற்க இலங்கையர்களுக்கு அழைப்பு!

கொழும்பு, பெப். 13

இந்திய அரசாங்கத்தின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம், ஆக்ராவிலுள்ள மத்திய ஹிந்தி நிறுவனம் மூலம் ஹிந்தி மொழியை கற்பதற்கு இலங்கை பிரஜைகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

ஹிந்தி மொழியை கற்பதற்கு விரும்பும் இலங்கை பிரஜைகளுக்கு கல்வி உதவித் தொகையாக திரும்பு வதற்கான விமான பயணச்சீட்டு , மாதாந்த உதவித் தொகை , தங்குமிட வசதி மற்றும் வருடாந்த புத்தக கொடுப்பனவு ஆகியவை வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஹிந்தி மொழியை கற்பதற்கு விரும்பும் இலங்கை பிரஜைகள் 19 முதல் 45 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். இது குறித்த மேலதிக விபரங்களை www.hcicolombo.gov.in என்ற இணையத் தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலே குறிப்பிட்ட இணையத்தளத்தில் இருந்து விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்து முன்கூட்டியே பூர்த்தி செய்து வைத்துக்கொள்ள முடியும். ஹிந்தி மொழியை கற்பதற்கு விரும்பும் இலங்கை பிரஜைகள் மார்ச் 9 ஆம் திகதி முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை சுவாமி விவேகானந்தர் கலாசார நிலையம் (இந்திய கலாசார நிலையம்), 16/2, கிரிகோரி வீதி, கொழும்பு 07 இல் இடம்பெறவுள்ள நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்க வேண்டும்.

நேர்முக தேர்வுக்கு வருவோர் கல்விச் சான்றிதழ்கள், அடையாள அட்டை மற்றும் ஹிந்தி பயின்றதற்கான சான்றிதழ்களின் பிரதிகளை கொண்டுவருதல் வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# போதைப்பொருட்களுடன் இளைஞர் ஒருவர் கைது!

கொழும்பு, பெப். 13

கட்டுநாயக்கா முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப்பொருட்களுடன் இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்கா பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரிடமிருந்து, 108 கிராம் 200 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும் 68 கிராம் 320 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருட்களும் கைப்பற்றப்பட்டன.

சந்தேக நபர் ஜா-எல பகுதியை சேர்ந்த 22 வயதுடைய இளைஞன் என தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்கா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பட்டாசு தொழிற்சாலையில் தீ விபத்து; ஒருவர் காயம்!

கொழும்பு, பெப். 13

பட்டாசு தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

கட்டுநாயக்கா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஆடிஅம்பலம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், காயமடைந்தவர் நீர்கொழும்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

காயமடைந்தவர் மகியங்கனையை சேர்ந்த 35 வயதுடையவர் என்று தெரியவந்துள்ளது.

கட்டுநாயக்கா பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

தீ பரவலுக்கான காரணம் கண்டறியப்படவில்லை. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அஸ்வெசும பெப்ரவரி மாத கொடுப்பனவுகள் வைப்பு!

கொழும்பு, பெப். 13

அஸ்வெசும நலன்புரி திட்டத்தின் பயனாளிகளுக்கான பெப்ரவரி மாதக் கொடுப்பனவுகள் நேற்று வியாழக்கிழமை முதல் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ளன என்று நிதி அமைச்சு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

தகுதியுள்ள அனைத்து பயனாளிகளுக்குமான பெப்ரவரி மாதத்துக்கான நிதி ஒதுக்கீடுகள் நேற்று வங்கிகளுக்கு விடுவிக்கப்பட்டன. பயனாளர்கள் தமது வங்கிக் கணக்கினூடாக கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று நிதி அமைச்சு அறிவித்துள்ளது. (ஐ)

# போதையில் சாரத்தியம் செய்த 7 பேர் பிலியந்தலையில் கைது

கொழும்பு, பெப். 13

போதைப்பொருளை பாவித்து விட்டு பயணிகள் பேருந்தை செலுத்திய 7 சாரதிகள், நடத்துநர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிலியந்தலை பிரதான பேருந்து நிலையத்திலிருந்து சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்து சேவையினரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் 170 பேருந்து சாரதிகள், நடத்துநர்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டபோதே இவர்கள் கண்டறியப்பட்டு கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களை கெஸ்பேவ நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# யானைகளை மோதுவதை தவிர்க்க ரயில்களில் வெப்ப உணர் கருவிகள்

கொழும்பு, பெப். 13

காட்டு யானைகள் ரயிலில் மோதி விபத்துக்குள்ளாவதைத் தடுப்பதற்காக ரயில்களில் வெப்ப உணர் கருவிகளை பொருத்துவதற்கு புகையிரதத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சுற்றாடல் அமைச்சு மற்றும் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு ஆகியன இணைந்து இந்த திட்டத்தை முன்னெடுக்கின்றன.

இதன்முதல்கட்டமாக கொழும்பு கோட்டையிலிருந்து பொலநறுவை நோக்கி பயணிக்கும் ரயில்களில் வெப்ப உணர் கருவிகளை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுற்றாடல் அமைச்சர் தம்மிக பட்டபெந்தி தெரிவித்துள்ளார்.

இது முன்னோடி திட்டமாக குறிப்பிட்ட காலம் வரை பரிசோதிக்கப்பட்டு அதன் வெற்றியை அடுத்து அந்த மார்க்கத்தில் பயணிக்கும் ஏனைய ரயில் எஞ்சின்களிலும் பொருத்துவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.02.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.